# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2013 - 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்:.......................................................................... நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழர் வீரத்தைக் கூறும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) தொல்காப்பியம்
இ) நல்வழி ஈ) புறநானூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. இயேசுநாதரைக் காட்டிக் கொடுத்தவன்

அ) தோமசு ஆ) யுதாசு இ) அல்விசு ஈ) கொலின்சு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. கலிங்க நாட்டை வெற்றி கொண்ட மன்னன்

அ) சோழமன்னன் ஆ) பாண்டியமன்னன்
இ) சேரமன்னன் ஈ) பல்லவமன்னன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கழகக் கால இலக்கியங்களின் பொருளாக அமைந்தவை

அ) அகம், மறம் ஆ) அகம், அறம்
இ) அகம், புறம் ஈ) புறம், மறம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பகைவனுடன் போரிடும் போது அப்பகைவனுக்குத் தீடீர் நேர்கை ஏற்பட்டால் அவனுக்கு உதவும் வீரனின் சிறந்த குணம்

அ) பேராண்மை ஆ) போராண்மை
இ) சான்றாண்மை ஈ) ஊராண்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. 'விசும்பு' என்ற சொல் குறித்து நிற்பது

அ) விண்மீன் ஆ) வானம்
இ) கதிரவன் ஈ) மேகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. பறக்கின்றன என்பது

அ) ஆண்பால் ஆ) பலர்பால்

இ) பலவின்பால் ஈ) ஒன்றன்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பாடல்அடிகளிலோ அல்லது சொற்களிலோ முதல் எழுத்துகள் ஒன்றி வருமாறு அமையும் சொல்லணி

அ) எதுகை ஆ) மோனை

இ) உவமை ஈ) உருவகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. ஒப்புயர்வற்ற உலக இலக்கியம் எனப்படுவது

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) சிலப்பதிகாரம் ஈ) நாலடியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஆகா! எவ்வளவு பசுமையாக இருக்கிறது இவ் வயல்வெளி! இச் சொல்லியம்

அ) கூற்று ஆ) வினா

இ) ஏவல் ஈ) வியப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ''வடவேங்கடம் தென் குமரி ஆயிடத் தமிழ் கூறும் நல்லுலகம்'' என்று கூறும் நூல்

அ) குறுந்தொகை ஆ) முத்தொள்ளாயிரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. தமிழரது சைவ வழிபாட்டில் வேள்வி செய்யும் முறையைப் புகுத்தியவர்

அ) ஆரியர் ஆ) சமணர்

இ) பல்லவர் ஈ) வைணவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. தன்மை, முன்னிலை படர்க்கை என்பன

அ) எண் ஆ) பால்

இ) இடம் ஈ) திணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பின்வருவனவற்றுள் பகாச்சொல்

அ) நிலம் ஆ) ஆசிரியர் இ) நண்பர் ஈ) கலைஞன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. மணிப்பிரவாளம் என்னும் தமிழ்நடை உருவாகியது

அ) தமிழும் வடமொழியும் கலந்து

ஆ) வடமொழியும் எலுவும் கலந்து

இ) வடமொழியும் பாளியும் கலந்து

ஈ) தமிழும் பாளியும் கலந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ‘‘முந்தும் மனவெறி மொழிகளில் அமையின்
முன்பின் இங்கொணாத கலை மலரும்’’ என்று கூறியவர்

அ) தனிநாயகம் அடிகள் ஆ) விபுலாநந்த அடிகள்

இ) இளங்கோ அடிகள் ஈ) மறைமலை அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. நன்னூலை எழுதியவர்

அ) ஆறுமுகநாவலர் ஆ) தொல்காப்பியர்

இ) பவணந்தி ஈ) இளம்பூரணனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பின்வருவனவற்றுள் வினைமுற்று

அ) வந்த ஆ) வந்து இ) வந்தான் ஈ) வா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. கி.பி 6 - 9ம் நூற்றாண்டு வரை தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்டவர்கள்

அ) ஆரியர் ஆ) பல்லவர் இ) களப்பிரர் ஈ) சோழர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. உயிர்நெடில் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 5 ஆ) 7 இ) 18 ஈ) 12

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. களப்பிரர் தமிழ் நாட்டில் நுழைந்த நூற்றாண்டு

அ) கி.பி 6ம் நூற்றாண்டு ஆ) கி.பி 2ம் நூற்றாண்டு

இ) கி.மு 6ம் நூற்றாண்டு ஈ) கி.மு 2ம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. 'கண்டான்' என்ற சொல்லின் வினையடி

அ) காண் ஆ) கண்ட இ) கண் ஈ) கண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. இன்று கேரளம் என்று அழைக்கப்படும் நாடு

அ) பாண்டியநாடு ஆ) சோழநாடு

இ) சேரநாடு ஈ) வடநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. வல்லினமெய் எழுத்துக் கூட்டம்

அ) ங் ஞ் ண் ந் ம் ன் ஆ) ய் ர் த் வ் ட் ள்

இ) க் ச் ட் த் ப் ற் ஈ) க் ச் ட் த் ல் ண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பின்வருவனவற்றுள் வினாவெழுத்து அல்லாதது

அ) எ ஆ) ஏ இ) யா ஈ) அ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. உவமையணிக்கு எடுத்துக்காட்டு

அ) மொழித்தேன் ஆ) பவளவாய்

இ) விழிக்கயல் ஈ) நெஞ்சக்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. ‘எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள்’ என்ற கவிதையை எழுதிய கவிஞர்

அ) அருள் சுப்பிரமணியம் ஆ) தாமரைக்கண்ணன்

இ) மன்னார் அமுதன் ஈ) உதயை வீரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பின்வருவனவற்றுள் தொழிற்பெயர்

அ) நடந்தார் ஆ) நடந்தான்

இ) நடந்தாள் ஈ) நடத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. தன் இனத்தைத் தானே காட்டிக் கொடுப்பவன்

அ) கோழை ஆ) வீரன்

இ) இரண்டகன் ஈ) பகைவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. தலைவணங்கினான் என்பது

அ) அன்மொழித்தொகை ஆ) வினைத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

மானம் என்பது தன்னிலையில் தாழாமையும் தாழ்வுவரின் உயிர் வாழாமையும் ஆகும். மாந்தர் தத்தம் தகுதி நிலையில் இருந்து தாழாமல் மானம் அழியாமல் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு தற்காத்துக்கொள்ள முடியாத நிலையில் உயிரைத் துறத்தலே மானத்தின் பெருஞ் செயலாகும். மிகப்பெரிய வளத்தோடு உயர்ந்த வாழ்க்கை கிடைக்கு மென்றாலும் கூட எந்நிலையிலும் மானத்திற்கு இழிவான செயல்களைச் செய்தல் கூடாது. மக்கள் அவரவர் பேண வேண்டிய ஒழுக்கத்திலிருந்து விலகிவிட்டால் அவர்கள் மிக இழிவானவர்களாகக் கருதப்படுவர். அத்தகைய மாந்தரைக் குமூகம் வெறுத்து ஒதுக்கும். குமூகத்திலே அதிகளவு பெருமையோடு வாழ்பவர்கள் கூட மிகமிகச் சிறிய இழிவான செயலைச் செய்தாலும் தனது நிலையில் இருந்து தாழ்ந்து போய்விடுவர். எனவே மானத்தை விரும்புவர் எந்த நிலையிலும் மானத்துக்கு இழிவான சிறிய செயலையும் செய்தல் கூடாது. ஒருவன் தனது மானத்தை விட்டு பகைவன் பின் சென்று இரந்து வாழ்வதிலும் பார்க்க இறந்து விடுவதே மேலானது. தன் உடலிலுள்ள ஒரு மயிர் பறிக்கப்பட்டாலும் கவரிமா என்னும் விலங்கு உயிரை விட்டு விடுமாம். அவ்வாறே மானமுடையோரும் தனது மானத்துக்கு இழிவு வருமானால் உடனே உயிரை விட்டுவிடுவர். இவர்கள் மானத்துக்காக உயிரை விடுவார்களேயன்றி உயிருக்காக மானத்தை விடமாட்டார்கள் இதனாற்றான் எம் வீரர்களும் பகைவன் கையில் பிடிபட்டு மானம் இழக்கும் நிலை வந்து விடக்கூடாது என்பதற்காகக் கழுத்திலே நஞ்சைச் சுமந்தார்கள். சுமக்கின்றார்கள். மானத்திற்காக உயிரைவிட்டவர்களை உலகமே போற்றி வணங்கும். அதனாற்றான் நாமும் எம் மாவீரர்களையும் என்றும் போற்றி வணங்குகின்றோம்.

1. மானம் என்றால் என்ன?

______________________________________________

______________________________________________

2. எப்போது ஒருவன் இழிந்தவனாகக் கருதப்படுவான்?

______________________________________________

______________________________________________

3. எம் வீரர்கள் ஏன் கழுத்தில் நஞ்சைச் சுமந்தார்கள்?

4. தன்னுடலிலிருந்து ஒரு மயிர் பறிக்கப்பட்டாலும் உயிரை விடும் விலங்கு எது?

5. யாரை உலகம் போற்றி வணங்கும்?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. அரசமட்டத்தில் ஆரியம் விரவியதற்கான சிறந்த ஓர் எடுத்துக்காட்டு எது?

2. வடக்கிருத்தல் என்றால் என்ன?

3. தேவையில் எழுந்த காலத்தின் கவிதைகளில் உமக்குப் பிடித்த கவிதை எது? ஏன்?

4. முந்நீர் எனக் கூறப்படுபவை எவை?

5. ஆரிய ஊடுருவல் எக்காலப் பகுதியிலிருந்து தொடங்கியது?

6. ‘‘கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்த நுதல்........’’ இப்பாடல் அடிகளில் குறிப்பிடப்படும் மன்னன் யார்?

7. பல்லவர் துணையோடு தமிழர் வழிபாட்டில் ஆரியர் எதைப் புகுத்தினர்?

புள்ளிகள் 10

**4) பின்வரும் கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

## தாய்நாடு

தாய் மண்ணில் நான் பிறக்கவில்லை என்றாலும் - என்

தாய் நாட்டை நான் மறக்கவில்லை

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. சுட்டெழுத்துகள் ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

______________________________

______________________________

2. இலக்கியவகையால் சொற்கள் எத்தனை?
பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

இயற் சொல் :- ______________

திசைச் சொல் :- ______________

3. மெய்யெழுத்துகள் எத்தனை வகைப்படும்?
இடையின மெய்யெழுத்துக் கூட்டத்தைத் தருக.

______________________________

______________________________

4. வேற்றுமைத்தொகை என்றால் என்ன?
அல்வழித்தொகை எத்தனை வகைப்படும்?

______________________________

______________________________

5. பின்வரும் மரபுத்தொடர்கள் ஒவ்வொன்றுக்கும் இவ்விரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

இணைமொழி :- ______________ ______________

அடுக்குத்தொடர் :- ______________ ______________

அடுக்கிடுக்குத்தொடர் :- ______________ ______________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

ஒருவரிடம் குறையும் இருக்கலாம் நிறையும் இருக்கலாம். ஒருவரது நிறைவைப் பற்றிப் பேசும் போது பலர் முன்னிலையில் பேசலாம். ஆனால் ஒருவரது குறையைச் சுட்டிக்காட்டிப் பேசும் பொழுது பலர் முன்னிலையில் அவரது குறையைப் பழித்துரைத்தல் கூடாது. அவ்வாறு செய்தால் அவர் திருந்தி விடுவார் என நாம் கருதக்கூடாது. ஏனென்றால் அந்த அணுகு முறை அவரை மிகவும் பாதித்து விடும். குறைகளைச் சுட்டிக்காட்டா விட்டால் அவரைத் திருத்துவது எப்படி என்று நீங்கள் கேட்கலாம். நிச்சயமாக ஒருவரது குறையைச் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். அவரைத் தனிமையில் அழைத்து அன்புடனும் பண்புடனும் அவரது குறைகளை எடுத்துக் கூறுவது பண்பான செயலாகும். அதைவிடுத்து பலர் முன்னிலையில் அவரது குறைகளைச் சுட்டிக்காட்டும் பொழுது அவர் திருந்த வேண்டிய சூழல் மிகவும் குறைவாகின்றது. "அற நனைந்தவனுக்கு குளிரென்ன கூதலென்ன" என்பது போல் அவர் நடந்து கொள்வார்.

ஒருவரது நிறைகள் பலர் முன்னிலையில் பேசப்படும் போது அவர் குமுகாயத்தில் உயர்ச்சி அடைவார். ஆனால் ஒருவரது குறைகளைப் பலர் முன்னிலையில் பேசும்பொழுது அவர் தாழ்ச்சியடைகின்றார். குமுகாயத்தால் ஒதுக்கப்படுகின்றார். எனவே நிறைகளை வெளிப்படையாகப் பேசுவோம். குறைகளைத் தனியாகப் பேசுவோம்.

**சுருக்கத்திற்கான குறிப்புக்கள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ ஆரியர் ஊடுருவலும் அது தமிழர் கல்வியில் ஏற்படுத்திய தாக்கமும்

★ தமிழர் வீரமும் நீர் படித்து வியந்த இடங்களும்

★ எம்மினத்தின் விடியலில் உமது பங்கு

புள்ளிகள் 20